# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள் – 03.06.2026

**(காணொளி காட்சி விசாரணை)**

## முன்னிலை

**திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., எம்.பில்., பி.எல்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 7351/A/2023**

**திரு. P.S.சீனிவாசன்** .. மனுதாரர்

*/எதிர்/*

**பொதுத் தகவல் அலுவலர் /**
**ஒருங்கிணைந்த கல்வி இயக்ககம்,**
**கல்லூரி சாலை,** .. பொது அதிகார அமைப்பு
**சென்னை.**

## ஆணை

**இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (03.06.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.**

| | |
|---|---|
| மனுதாரர் | **திரு. P.S.சீனிவாசன் அவர்கள் ஆஜராகவில்லை** |
| தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். அவரது வருகையின்மை பதிவு செய்யப்பட்டது. | |
| பொது **அதிகார அமைப்பு** | திருமதி.கா.காமாட்சி, **பொதுத் தகவல் அலுவலர் / உதவி இயக்குநர் (சுறறுச்சூழல்) பள்ளி கல்வி இயக்ககம், சென்னை அவர்கள் மருத்துவவிடுப்பின் காரணமாக ஆஜராகவில்லை.**<br><br>**திருமதி.ஏ,சத்தியபாமா, மேல்முறையீட்டு அலுவலர் / துணை இயக்குநர், பள்ளி கல்வி இயக்ககம், சென்னை அவர்கள் பொதுத்தகவல் அலுவலரின் சார்பாக ஆஜரானார்.** |
| சட்டப் பிரிவு 6(1) மனு நாள் | 22.12.2022 |

<table>
<tr><td colspan="2">மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)இன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், தகவல் பெறும் உரிமைச்சட்டம், பிரிவு 4(1)(a)-ன்படி முழு கோப்பின் நகல் வழங்கக்கோரியுள்ளார். மேலும் இது போன்ற தகவல்களை 8 இனங்களில் தனக்கு வழங்கக் கோரி விண்ணப்பித்துள்ளார்.</td></tr>
<tr><td>சட்டப் பிரிவு 6(3)-ன்கீழ் மனு மாற்றம் செய்த நாள்</td><td>02.01.2023</td></tr>
<tr><td>பொதுத் தகவல் அலுவலரின் பதில் நாள்</td><td>----</td></tr>
<tr><td>பிரிவு 19(1) முதல் மேல்முறையீட்டு மனு நாள்</td><td>13.03.2023</td></tr>
<tr><td>மேல்முறையீட்டு அலுவலரின் பதில் நாள்</td><td>----</td></tr>
<tr><td>பிரிவு 19(3) இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள்</td><td>20.04.2023</td></tr>
</table>

2. இன்றைய தின விசாரணைக்கு ஆஜரான **மேல்முறையீட்டு அலுவலர் / துணை இயக்குநர், பள்ளி கல்வி இயக்ககம், சென்னை அவர்கள் மனுதாரர் கோரிய தகவல்களுக்கு** 3434/ஜி4/2023, 15.03.2023. 3372/F/RTI/2023, 25.01.2023 **மற்றும்** 21005/F/RTI/2026, 01.06.2026 **நாளிட்ட கடிதங்களின் வாயிலாக பொதுத் தகவல் அலுவலரால் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்து, அவற்றின் நகல்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.**

3. **இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரர் ஆஜராகி தனது கருத்தை எடுத்துரைக்காத நிலையில், மனுதாரரின் மனுவையும் பொதுத் தகவல் அலுவலரின் பதிலையும் இணைத்து பரிசீலனை செய்கையில்,** ***மனுதாரருக்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை என்பது தெளிவாகிறது. எனவே, பொதுத்தகவல் அலுவலருக்கு இறுதி வாய்ப்பளித்து பின்வருமாறு உத்தரவிடுகிறது:-***

- ***மனுதாரர் 6(1) மனுவில் கோரிய தகவல்களுக்குரிய தகவல்களில் இனம் 1 மற்றும் 2-க்கு உரிய தகவல்களை "தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது" என்ற முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற இரு வார காலத்திற்குள் விரைவஞ்சலில் சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து விட்டு அதன் பின்னர், மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மனுதாரருக்கு அனுப்பி வைத்த கடிதத்தின் அஞ்சலக இணையதள ஒப்புகை சீட்டின் நகல் (Proof of Postal Tracking) ஆகியவற்றினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு 24.06.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு பொதுத்தகவல் அலுலவர் / உயர்கல்வி (ஏ2) துறை, தலைமைச்செயலகம், சென்னை அவர்களுக்கு ஆணையம் உத்தரவிடுகிறது.***
- ***மனுதாரர் 6(1) மனுவில் கோரிய தகவல்களுக்குரிய தகவல்களில் இனம் 3-க்கு உரிய தகவல்களை "தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது" என்ற முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற இரு வார காலத்திற்குள் விரைவஞ்சலில் சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து விட்டு அதன் பின்னர், மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும்***

*அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மனுதாரருக்கு அனுப்பி வைத்த கடிதத்தின் அஞ்சலக இணையதள ஒப்புகை சீட்டின் நகல் (Proof of Postal Tracking) ஆகியவற்றினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு 24.06.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு பொதுத்தகவல் அலுலவர் / தொழில் நுட்பக் கல்வி இயக்ககம், சென்னை அவர்களுக்கு ஆணையம் உத்தரவிடுகிறது.*

- *இனம் 4 முதல் 8 வரையான இனங்களுக்குரிய தகவல்கள் அளிக்கப்பட்டுவிட்ட காரணத்தால், பொதுத் தகவல் அலுவலர் / துணை இயக்குநர் (மின் ஆளுமை), பள்ளி கல்வி ஆணையரகம், சென்னை அவர்களை இவ்வழக்கிலிருந்து விடுவித்து ஆணையிடுகிறது.*

**ஒம்/- (வி.பி.ஆர். இளம்பரிதி)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 7351/A/2023</u>**

பெறுநர்

<u>பொது அதிகார அமைப்பு</u>

**பொதுத் தகவல் அலுவலர்,**
**துணை இயக்குநர் (மின் ஆளுமை),**
**பள்ளி கல்வி ஆணையரகம்,,**
**கல்லூரி சாலை,**
**சென்னை - 600 006.**

**பொதுத் தகவல் அலுவலர் /**
**உயர்கல்வி (ஏ2) துறை,**
**தலைமைச்செயலகம்,**
**சென்னை - 600 009.**

**பொதுத் தகவல் அலுவலர் /**
**தொழில் நுட்பக் கல்வி இயக்ககம்,**
**சென்னை - 600 025.**

<u>மனுதாரர்</u>

**திரு. P.S.சீனிவாசன்,**
**2/189, பழையூர்பட்டி,**
**கோட்டநத்தம்பட்டி அஞ்சல்,**
**மேலூர் வட்டம்,**
**மதுரை - 625 109.**

Copy to file

KRM/PA 05.06.2026